DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -4

| | | |
|---|---|---|
| Name | : திரு. ஜெகதீஷ்வரன் | Caste: |
| Father's Name: | திரு. பழனிவேல் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 3rd day of January -2024.

**A1 , A2, A5 to A9, A11, A13 to A18 present. A3 produced.**

**Date: 03.01.2024**

**முதல் விசாரணை**

நான் அரியலூர் மாவட்டம், வங்குடிகிராமத்தில் வசித்து வருகிறேன். இறந்துபோன காசிநாதன், தர்மலிங்கம், மகாலிங்கம், பிரபு, சுரேஷ் ஆகியோரை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். அ.சா.1 யை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும்.

கடந்த 16.05.2008 அன்று நான் எனது வீட்டில் இருந்தேன். அப்போது எனது வீட்டிற்கு கிழக்குபக்கமாக அலறல்சத்தம் கேட்டது. அப்போது காலை 9.30 மணி முதல் 10.00 மணி இருக்கும். சத்தம்கேட்டு நான் எனது வீட்டை விட்டு வெளியேவந்து பார்த்தேன். நான் பார்த்தபோது அ.சா.1 ராஜலிங்கத்தை எதிரிகள் சிலம்பரசன், திருவாளபுத்துார் ரமேஷ், திருஞானம், தினேஷ், பாஸ்கரன், காளிதாசன் ஆகியோர் கும்பலாக துரத்திகொண்டு வந்தார்கள். அந்த எதிரிகள் அனைவரும் கைகளில் பட்டாகத்தி, வீச்சருவாள் போன்ற ஆயுதங்களை வைத்திருந்தார்கள்.

நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆயுதங்களை போன்று தான்

வைத்திருந்தார்கள். காசிநாதனின் மகன் தர்மலிங்கத்தை, சக்திவேல் மகன் ரமேஷ் பட்டாகத்தியால் வெட்டினார். அப்போது எதிரி காளிதாசன் தர்மலிங்கத்தின் மார்பில் உட்கார்ந்துகொண்டார். எதிரி பாஸ்கரன் தர்மலிங்கத்தின் காலில் வெட்டினார். எதிரி சக்திவேல் மகன் ரமேஷ் தர்மலிங்கத்தின் தலையை தனியாக துண்டித்து அதனை எடுத்துசென்று காளியம்மன் கோவில் சூலாயுதத்தில் குத்திவைத்துவிட்டார்.

அப்போது தர்மலிங்கத்தின் அப்பா காசிநாதன் அங்கு வந்து எதிரிகளை பார்த்து தனது மகனை விட்டுவிடும்படி கையெடுத்து கும்பிட்டார். அப்போது திருவாளபுத்தூர் ரமேஷ் பட்டாகத்தியால் காசிநாதனின் விலாபக்கத்திலும், கன்னத்திலும் வெட்டினார். பக்கத்திலிருந்த எதிரி சிலம்பரசன் பட்டாகத்தியால் காசிநாதன் கழுத்தில் வெட்டினார். காசிநாதனின் பின்பக்கத்திலும் வெட்டிவிட்டார்கள். அதனால் காசிநாதன் அப்படியே சரிந்து கீழே விழுந்து இறந்துவிட்டார்.

அதனை பார்த்த காசிநாதன் மனைவி ஜானகி ஓடிவந்தார். அவரை எதிரி திருவாளப்புத்தூர் ரமேஷ் பட்டாகத்தியால் தலையில் வெட்டினார். எதிரி தினேஷ் ஜானகியின் மார்பு பகுதியில் வீச்சருவாளால் வெட்டிவிட்டார். சத்தம் கேட்டு கும்பல் கூடிவிட்டது. நான் பயந்துகொண்டு பக்கத்திலுள்ள பூராசாமி பெட்டிகடையில் ஒளிந்துகொண்டேன். சிறிது நேரம் கழித்து வந்து பார்த்தேன். தர்மலிங்கத்தின் தலையானது காளியம்மன் கோவில் சூலாயுதத்தில் குத்தி வைக்கப்பட்டிருந்தது. பிரபு என்பவரின் தலையானது காளியம்மன் கோவிலின் பின்புறம் தரையில் கிடந்தது.

எதிரிகள் விஜய், ஜவகர்பாபு, ஸ்ரீதர், சுரேஷ் ஆகியோர் இறந்த நபர்கள் தப்பித்துபோய்விடக்கூடாது என்பதற்காக அவர்களை சுற்றி வளைத்துக்கொண்டார்கள். எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதாலும், அவர்கள் எனக்கு உறவினர்கள் என்பதாலும் அவர்களை எனக்கு நன்றாக தெரியும். ( எதிரிகளை சாட்சி சரியாக அடையாளம் காட்டுகிறார்.)

சிறிது நேரத்தில் போலிசார் அங்கு வந்துவிட்டார்கள். ஜானகியை ஆம்புலன்ஸ் வாகனத்தின் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். யாரும் பக்கத்தில் போகமுடியவில்லை. பூராவும் ரத்தகாடாக இருந்தது. இவை அனைத்திற்கும் காரணம்

எதிரி பாரதிதாசன் தான். அவர்தான் எங்கள் ஊருக்கு தினசரி வந்து எதிரிகளை பார்த்து பேசுவார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>8 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இறந்துபோன 5 நபர்களும் எனக்கு நெருங்கிய உறவினர்கள். எதிரிகள் அனைவரும் எனது ஊரை சேர்ந்தவர்கள். எனவே அவர்கள் அனைவரது பெயரும் எனக்கு நன்றாக தெரியும். நான் முதல்விசாரணையில் சொன்ன எதிரிகள் அனைவரது பெயர்களையும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 16.05.2008 அன்று காலை 9.30 முதல் 10.00 மணிக்குள்ளாக நான் வீட்டில் இருந்ததாகவும் அப்போது சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்ததாகவும் போலிசார்விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

இறந்துபோன தர்மலிங்கத்தின் உடலில் என்னென்ன காயங்கள் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. இறந்துபோன தர்மலிங்கத்தின் காலில் வெட்டு காயம் இருந்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவ நேரத்தில் 8 ஆம் எதிரி பாஸ்கரன் சம்பவஇடத்திலேயே இல்லை என்றாலும், அவர் சம்பவ இடத்தில் இருந்ததாக நான் பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

இறந்துபோன நபர்கள் எப்படி இறந்தார்கள் என்று எனக்கு நேரில் தெரியாது என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் 8 ஆம் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. அ.சா.1 கேட்டுகொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

<u>13 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 12 ஆம் வகுப்பு படித்திருக்கிறேன். எனது முதல்விசாரணையில் வழக்கு சம்பவம் தொடர்பாக எனக்கு தெரிந்த சங்கதிகள் அனைத்தையும் சொல்லிவிட்டேன். விட்டுபோன சங்கதிகள் எதுவும் இல்லை என்றால் நான் நேரில்பார்த்த சங்கதிகளை சொல்லியிருக்கிறேன். நான் காளியம்மன் கோவில் தெருவில் குடியிருக்கிறேன். இறந்துபோன பிரபு எனது சித்தப்பாவின் மகன். இறந்துபோன மற்ற நால்வரும் எனது உறவினர்கள் தான்.

இறந்துபோனவர்கள் மற்றும் எதிரிகள் ஆகியோர் ஒரே ஜாதியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சம்பவம் தொடர்பாக போலிசார் என்னை சம்பவ இடத்தில்வைத்து சம்பவதினத்தன்றே விசாரித்தார்கள். நான் சம்பவத்தை பூராசாமி பெட்டிகடைக்கு வெளியில் வைத்து பார்த்தேன். நான் குடியிருக்கும் இடத்திற்கும், சம்பவ இடத்திற்கும் இடையே 20 அடி தொலைவு இருக்கும்.

முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசார்விசாரணையிலும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். சம்பவமானது எவ்வளவு நேரம் நடந்தது என்றால் சுமார் 10 முதல் 15 நிமிடத்திலேயே 5 பேரையும் காலிசெய்துவிட்டார்கள். அ.சா.1 ராஜலிங்கத்தை எதிரிகள் திருவாளப்புத்துார் ரமேஷ், சிலம்பரசன், தினேஷ், ராஜதுரை, திருஞானம், ரவிசந்திரன் ஆகியோர் கும்பலாக துரத்திகொண்டு வந்தார்கள்.

அவ்வாறு எதிரிகள் துரத்திவந்தபோது அ.சா.1 ராஜலிங்கம் மட்டும் ஓடிவந்தாரா அல்லது வேறு நபர்களும் ஓடிவந்தார்களா என்றால் மகாலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோரும் ஓடிவந்தார்கள். அவர்கள் கிழக்கிலிருந்து மேற்குநோக்கி ஓடிவந்தார்கள். ராஜலிங்கம் அவருடைய வீட்டின் பின்பக்கமாக ஓடிவிட்டார். அமிர்தலிங்கம் தெற்குபக்கமாக ஓடிவிட்டார். மகாலிங்கத்தை தான் முதலில் வெட்டினார்கள். காசிநாதனை வெட்டிய இடத்திலிருந்து 30 அடி துாரத்தில் மகாலிங்கத்தை வெட்டினார்கள்.

மேற்கண்ட சங்கதிகளை நான் போலிசார்விசாரணையில் சொல்லியிருக்கிறேன். வழக்கு சம்பவம் வரையிலும் 13 ஆம் எதிரிக்கும், இறந்துபோன நபர்களுக்கும் நேரடியான விரோதம் கிடையாது என்றால் சரிதான். ஆனால் இறந்துபோனவர்களின் குடும்பத்தை பழிவாங்கவேண்டுமென்று அவர் தான் திட்டம் வகுத்தார். எப்போது திட்டம்போட்டார் என்றால் சம்பவம் நடந்தலிருந்து சுமார் 15 நாட்களுக்கு முன்னர் அவ்வாறு திட்டம் போட்டார்.

இறந்துபோனவர்களின் குடும்பத்தை பழிவாங்குவதற்காக 13 ஆம் எதிரி 15 தினங்களுக்கு முன்பாக திட்டம் போட்டார் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். 13 ஆம் எதிரி திட்டம்போட்டது தொடர்பாக நான் போலிசில்

புகார்கொடுக்கவில்லை. அது தொடர்பாக இறந்தவர்களின் குடும்பத்திற்கு நான் தகவல் சொன்னேனா என்றால் அதுதொடர்பாக அவர்களுக்கே தெரியும்.

காசிநாதனை பூராசாமிகடையின் வாசலில் வைத்து வெட்டினார்கள். ஜானகியை அந்த இடத்திலிருந்து 10 அடி தூரம் தள்ளி உள்ள இடத்தில்வைத்து வெட்டினார்கள். நான் பூராசாமி கடையின் உள்ளே சென்று ஒளிந்துகொண்டபோது வேறு யாரும் அங்கு இருந்தார்களா என்றால் நான் மேற்படி கடைக்கு பக்கத்தில் உள்ள சந்து பகுதியில் தான் ஒளிந்துகொண்டேன். கடையில் வேறு யாரும் இல்லை. பூராசாமிகடைக்கு முன்புறம் காசிநாதன் மற்றும் ஜானகியை வெட்டிய இடத்தில் வேறுயாரும் இருந்தார்களா என்றால் ஊர்மக்கள் இருந்தார்கள். ஆனால் அவர்கள் பயந்துகொண்டு யாரும் பக்கத்தில் வரவில்லை என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார்.

நான் சொல்லும் ஊர்மக்கள் காசிநாதனை வெட்டும் சமயத்திலேயே அங்கு இருந்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியன்று நான் வங்குடி கிராமத்திலேயே இல்லை என்றாலும், வெளியூருக்கு வேலைக்கு போய்இருந்தேன் என்றாலும் சரியல்ல. நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும், போலிசார் கேட்டுகொண்டதற்கிணங்க பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. 13 ஆம் எதிரிக்கும், வழக்கு சம்பவத்திற்கும் தொடர்பில்லை என்றாலும், 13 ஆம் எதிரி திட்டம் தீட்டிகொடுத்ததின் அடிப்படையில் தான் வழக்கு சம்பவம் நடைபெற்றதாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

13 ஆம் எதிரி 2 ஆம் எதிரியின் சகோதரர் என்ற ஒரே காரணத்தினால் அவரை இந்த வழக்கில் பொய்யாக சேர்த்திருக்கிறோம் என்றால் சரியல்ல.

**6 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்துபோன நபர்கள் எனது உறவினர்கள் என்பதால் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. 6 ஆம் எதிரியை பொறுத்து நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றாலும், அந்த சங்கதிகளை நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. ( மற்ற சங்கதிகளை பொறுத்து 13 ஆம் எதிரி தரப்பு

குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்ளுகிறார்).

**3 ஆம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அவர் மேற்கண்ட குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார்.**

**எதிரிகள் 1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 ஆகியோர் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜரில்லை. எனவே அவர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.